உ

சிவமயம்.

திருவேரகம்

சுப்பிரமணியக்கடவுள் மெஞ்ஞானப்பதிகம்.

ம. திருவேங்கட முதலியாரால்,

சென்னை

ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1905. [பை-௫.

உ

முருகன்றுணை.

திருவேரகம்

சுப்பிரமணியக்கடவுள் மெய்ஞ்ஞானப்பதிகம்.

இரட்டையாசிரிய விருத்தம்.

சித்தமாய்நின்றபர மானந்தவுச்சியிற் சிவஞானதீபமாகித், திகழிரவியாகி மதியாகி தேசியினிற்சிலம்பொலியிணைதமாகிச், சத்தமாய்நின்றபர மாநந்தநாதமாய்ச் சண்முகக்கடவுளாகிச், சரவணேற்பவமுருகாவாவெனத்துதிக்கின்ற சடாட்சரரூபமாகி, நித்தமாய்நின்றமயிலேறுமாதேசியாய் நிற்குணநிராகாரமாய், நிர்மலநிரஞ்சன வகண்டபரிபூரண நிசரூபமானகுருவே, சுத்தமாய்நின்றவேல் சித்தமாய்வைத்தநின் சொரூபத்தையென்றுகாண்பேன், துரைராஜதெட்சநிகர் திருவேரகத்திலுறை சுப்ரமணியக்கடவுளே. (க)

ஆதிசிவரூபமாய் நாசியொளியூடுபோ யகண்டமயமாகியெங்கும், அகாரவடிவாகியே யுகாரவடிநாதமாயநாதியின்மகாரமாகி, நிதிசிவஞானமாயோதியத்போதனாந்தணிஷ்டைக்குநேசமாகி, நியன்றி யானன்றி இ

ரண்டிலுமிலாததோர் நெற்றிமேலிட்டசுழியில், பூச்சி வவானந்த பொங்குகடலங்கண் புருவநடுவானவெளி யில், போதமயமாகவருநாதவொலிசிதமொருபுலியூகி ரிடத்திலென்றுஞ், சோதிசிவமயின்மீதிலாதிவேர்க்கை யுடன் சொரூபத்தையென்றுகாண்பேன், துரைராச தெட்சநிகர் திருவேரகத்திலுறை சுப்ரமணியக் கட வுளே. (௨)

தூலமயமாகிய மூலவாதிஷ்டான தோன்றுமணிபூ ரமாகிச், சொற்பெரியவநாரத விசுத்திமேலாக்கினைக டோன்றுமண்டலங்கண்மூன்றாய், வாலைமயமாகிய ம னோன்மணியினம்பிகை மகாரமுங்கடந்துதாண்டி, ம ணிச்சிலம்போசைமேல்நோலமயமாகவே கொக்கண வர்காணவே கோடானகோடிநடனம், கும்பமுனித ன்னுடனம்பலத்தாடி குமரகுருவானபரனே, சூலமய வேலுடனீலமயின்மீதிலே சொரூபத்தை யென்றுகா ண்பேன், துரைராஜதெட்சனிகர்திருவேரகத்திலுறை சுப்ரமணியக்கடவுளே. (௩)

தற்பரமதாகிய நயனநடுவெளியிலே தங்குநாதப்பிர மமாய், சாலோகசாமீப சாரூப சாயுச்சிய சதகோடி ரவிமதியுமாய், நற்பிரபவுச்சிமே னம்பரமவெளியிலே நாதாந்தபோதாந்தமாய், நாலுமறைவேதமுமோலமி ட்டறியாத நந்தியொளிகாந்தியாகி, விற்பரமவெளியி லே ஒளியாகி அறிவாகி மேன்மையாய் வெளியுமாகி, விண்ணோர்கள்காணவே முன்னோர்களறிவிலே மெய்

ஞ்ஞானமௌனமான, சொற்பரமசண்முக வெப்போதுமறவாமல் சொரூபத்தையென்றுகாண்பேன், துரைராசதெட்சங்கர் திருவேரகத்திலுறை சுப்ரமணியக்கடவுளே. (௪)

வாசிபிடைகடையாகி மதிஞலும்பாழதாய் மறுபட்டுநின்றமனதை, வங்கென்றுவாங்கியதை சிங்கென்றுரேசித்து வச்ரமலையுச்சிமேலே, நாசிபிடையூடுபோய் வீசிவிடுமும்மல நாதாந்தமுத்திபிதுவே, நக்கனர் சொக்கர்துணை முக்கியமீஃதுண்மையோ நடுவானகடவுளிதுவே, தேசிபிடைபாயாமல் வாசமிடுமலர்போலத்தேனுக்குளினபமொக்குஞ், சிவசிவாயாகார நடனமிடுசண்முகா தேவாதிதேவர்கோவே, தாசிபடவேயசுரர்நாசமுறவேயளித் தோகைமயில் வேலுமாகத், துரைராசதெட்சங்கர் திருவேரகத்திலுறை சுப்ரமணியக்கடவுளே. (௫)

அண்டபகிரண்டத்துக் கப்புறமுப்பாலுமப்பாலுக்கப்பாலுமா, யணுவிலணுவாகியே வுபநிடதநடனமர்யருளுமொரு பரமவணுவே, கண்டமுதலறிவேதனைடிசைக்கோடியுங் காணுணுக்கருணைவாழ்வே, கருதுமடியார்க்கடம் மறுகிலுறுமுறுகலிரு கண்ணோடிருந்தகழலே, பண்டைவினையகலவிடுதொண்டுபடமௌனமொழிபகருவதுனக்கருமையோ, பரமசிவகுருவான திருமுருகசண்முகா பத்திக்குமுத்திமுதலே, தொண்டர்கடுவாகிய சூரசங்காரனே சூராதிசூரர்காலா, துரை

ராசதெட்சனிகர் திருவேரகத்திலுறை சுப்ரமணியக்
கடவுளே. (௬)

மறவுமனவெளிமாயை யுறவுமொருவுபதேச மௌ
னமொழியருளவேண்டும், வருகின்றபசுபாச மெரிகி
ன்றுபோகவு மந்திரஞ்செய்யவேண்டும், நிறைவுசிவ
யோகமும் பரவுபரலோகமு நின்கருணை என்கருணை
யாய், நியின்றிவேறுதுணை யாதொன்றெனக்கில்லைநிர்
மலாநந்தபரமே, யுறவுபரவெளியாகித் திரவுகோனி
யாகி யுற்பனஞ்செய்யவேண்டும், மொன்றினுக்கொ
ன்றாகி யெண்டிசைகளெங்கினு முண்மையாய் நின்றசி
வமே, துறவுசிவஞானிகள் பரவுசண்முகவனே தூண்
டாததீபசுடரே, துரைராசதெட்சநிகர்திருவேரகத்தி
லுறை சுப்ரமணியக்கடவுளே. (௭)

அகண்டபரிபூரண வகாரமுமகாரமா யறிவுமுடலு
யிருமாகி, யம்பரசிதம்பர சம்புசிவசம்புவே யதிநடுவு
காரமாகி, நிகண்டபரநாதமாய் ரீங்காரஓங்காரநிர்மல
சொரூபமாகி, நிற்குணநிரஞ்சன சற்குணசடாக்ஷர நி
திசிவமானபொருளே, புகண்டபரமூலமாய் புருவநடு
மாகியேபோதமயமாகிநின்று, போதிப்பதற்குமௌ
திசிவகுருவதி பொய்யல்லமெய்யுமிதவே, துசண்டவ
ர்க்கிசமாயகண்டபரிமயின்மீதில் சொரூபத்தைமென்
றுகாண்பேன், துரைராசதெட்சநிகர் திருவேரகத்தி
லுறை சுப்ரமணியக்கடவுளே. (௮)

அருவமயமாகிய பம்பரமவெளியிலே யறிவுதருகுருவுமான, வானந்தமோனந்த தானந்தமயமானவாறுமுகமானவருளே, புருவமைமநயனவொளி பரமவெளியாயிதுவொருவாகநின் றொன்றே, புரமெரியமும்மலந்தாமெரியவேசுடர் பொங்கிநிற்கின்ற வொளியில், குருவுமயமாகவருமுருகசரவணபவகோடானகோடி வெளியில், முகும்பிட்டுமென்பிறவி யின்விட்டுமோடவே கோணுதவந்தருளுவாய், சொரூபமயமாகவருகருணைதருசண்முகா சொரூபத்தைதயென்றுகாண்பேன் துரைராசதெட்சநிகர் திருவேரகத்திலுறைசுப்ரமணியக்கடவுளே. (௯)

சுத்தநின்கருணையாலென்றனறியாமையாற்கருதாம் வாழ்த்தொன்றுசொன்னேன், கருணைதருபெரியோர்களருணமலர்கமலமென் கபாலத்தில்விட வேண்டும், எந்தனுடபொருளாகிவிந்துநிற்கவொருமௌனமோராந்தவெட்டவெளியில், இன்பதுன்பங்கடந்தபரமவொளியிலே யென்றும்போதித்தருளுவாய், உந்தனிடசிந்தனை வந்துமனுபூதியா யோமென்று மேலதாக, வொருவரறியாதபர சரவணோற்பவகுகவுன்மையாய் நின்றசிவமே, தொந்தவுடலேர்தவனைக வந்தவழிகண்ணினது சொரூபத்தைதயென்றுகாண்பேன், துரைராசதெட்சனிகர் திருவேரகத்திலுறை சுப்ரமணியக் கடவுளே. (௰)

அம்பரமதாகிய சம்புசிவசம்புவே யறிவுதருமௌ
னவாழ்வே, யடியவர்க்கருள்புரியு நெடியபன்னிருகர
வானந்தமானவருளே, யும்பரமதாகியேவொளிவெளி
யினூடுபோ யோங்காரரீங்காரமா, யுருவிலருவாகியே
யறிவினுருவாகியே யுண்மையாய்நின்றசிவமே, நம்பர
மதாகிய கும்பகம்ரேசக நாசியிடைநயனநடுவி, நல்ல
றிவுசொல்லறிவு வல்லதொருபூரக நாதாந்த மானமய
வே, தம்பரமதாகிய சிதம்பரபராபர சச்சிதானந்தசி
வமே, சருவமயமாகிய வறுமுகவகுருபர சண்முகசி
காமணியனே. (௰௧)

மெய்ஞ்ஞானப்பதிகம்
முற்றிற்று.

கந்தபுராணம்.

இருப்பரங்குறைத்திடு மெஃவேலுடைப்
பொருப்பரங்குணர்வுறப் புதல்விதன்மிசை
விருப்பரங்கமரிடை விளங்கக்காட்டிய
திருப்பரங்குன்றமர் சேயைப்போற்றுவாம். (௧)

காவிதன்குடி யாறு காமர்பொன்னகர்
மேவினன்குடிவர விளியச்சூர்முதல்
பூவினன்குடியறப் பொருக்குமாறுற
ஆவினன்குடி யாறுமலர்போற்றுவாம். (௨)

ஒன்றுதோறுடலை யொருவியாவிமெய்க்
குன்றுதோறுடலை தொடங்கியெவ்வகை
மன்றுதோறாடிய வள்ளல்காமுறக்
குன்றுதோறாடிய குமரர்போற்றுவாம். (௩)

சூரலைவாயிடைத் தொலைத்துமார்புகின்
றலைவாயிடு மெஃகேந்தியே
வேலைவாய்வரும் வெள்ளிவெற்பொரீஇச்
சீரலைவாய்வருந் தேவைப்போற்றுவாம். (௪)

எழுமதிற் றினைப்புனைத் திரவிமுன்புதன்
கிழுமுதிரினநலங் கிடைப்பமுன்னவன்
மழுமுதிர்களிறென வருதல்வேண்டிய
பழமுதிர்சோலையும் பகவர்போற்றுவாம். (௫)

நிரகத்தேவனை நினைக்குமன்பினோர்
பேரகத்தலம்வரும் பிறவிநீத்திடும்
தாரகத்துருவமாந் தகைமையெய்திய
ஏரகத்தறுமுக னடிகளேற்றுவாம். (௬)

கந்தபுராணம்

முற்றிற்று.